கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு 118 (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) இல் திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற அனைத்து நேஷன்ஸ் பிரபுத்த சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகளும் கட்டுப்படுத்தப்படும்:

" சிரேஷ்ட பிரஜைகள் " என்றால் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று பொருள்படும்.

1. சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகளை, கணக்குப் புத்தகம் வழங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளாகவோ அல்லது கணக்குக் கூற்று வழங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளாகவோ திறக்கலாம்.

2. வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்டக் கூடிய ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடிகின்ற ஓர் ஆவணம் (உதா: தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம்) மற்றும் முகவரியைச் சரிபார்க்கக்கூடிய ஓர் ஆவணம் (உதா: சமீபத்தில் வழங்கப்பட்ட மின்/நீர்க் கட்டண பில், வங்கி கணக்குக் கூற்று) ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியினால் அங்கீகரிக்கப்படக் கூடிய ஒரு நபர் / நபர்கள் கணக்கைத் திறக்கலாம்.

3. சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கை பின்வரும் நபர்கள் திறக்கலாம்:

   (அ) ஒரு தனி நபருக்கு, அவரின் பெயரில்

   (ஆ) ஆணையில் (mandate) பணம் மீளப் பெறும் அதிகாரம் பற்றி தெளிவான அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் அவர்களின் பெயரில் கூட்டுக் கணக்கைத் தொடங்கலாம் என்பதுடன், கணக்கு வைத்திருக்கும் பிரதான நபர் ஒரு சிரேஷ்ட பிரஜை யாக இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கிற்கும் ஓர் கணக்கிலக்கம் வழங்கப்படும் என்பதுடன், வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல் படிவங்களிலும் அந்த இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுத்து விட்டு மேற்படி இலக்கத்தை மாற்றுவதற்குக் வங்கிக்கு உரிமை உண்டு.

5. ஒரு கூட்டுக் கணக்கில் பங்குதாரர் இறந்தால், உயிருடன் இருக்கும் மற்ற நபர்/நபர்கள் இறந்த தேதியைக் குறிப்பிட்டு உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய கணக்குகளின் பரிவர்த்தனைகள் ஏற்புடையதாகின்ற சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. பிரிவு 26-ல் உள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தனது சொந்த பெயரில் சேமிப்புக் கணக்கைத் திறக்கும் அல்லது பராமரிக்கும் தனிப்பட்ட கணக்கு வைத்திருப்பவர், வங்கியால் வழங்கப்படுகின்ற ஒரு பின்னுரித்தாளி நியமனப் படிவத்தை நிரப்பி, கணக்கு வைத்திருப்பவர் இறந்தால் நிலுவைத் தொகையைப் பெறுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைப் பயனாளியாக/பயனாளிகளாக நியமிக்கலாம்.

6. வங்கி, கணக்கு வைத்திருப்பவருக்கு ஒரு கணக்குப் புத்தகத்தை அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் கணக்கு அறிக்கையை வழங்கும் என்பதுடன், அதை கணக்கு வைத்திருப்பவர் கவனமாக பாதுகாக்க வேண்டும்.

கணக்குப் புத்தகம் வழங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்.

7. தேவைப்படும் போதெல்லாம் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டிய கணக்குப் புத்தகத்தில் கணக்கு வைத்திருப்பவர் எந்தப் பதிவுகளையும் செய்யக் கூடாது. இது இன்னொருவரின் பெயருக்கு மாற்றக் கூடிய அல்லது உரிமைசாட்டக் கூடிய ஒன்றல்ல என்பதுடன், இதைப் பிணையாக வைக்கவும் முடியாது. மேற்கொள்ளப்படுகின்ற பதிவுகள் சரியாக உள்ளதா என்பதை ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பிறகும் சரிபார்க்க வேண்டும். ஏதேனும் பிழை அல்லது தவறு இருந்தால், உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். கணக்குப் புத்தகம் தொலைந்து விட்டாலோ அல்லது அழிந்து விட்டாலோ, கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக அது பற்றி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

8. கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் எதுவும் இல்லாமல் வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது பற்று / வரவு மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் என்பதால், கணக்குப் புத்தகம் எப்போதும் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கின் சரியான நிலுவையைக் காட்டாது.

9. வழங்கப்பட்ட கணக்குப் புத்தகத்தைத் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். கணக்குப் புத்தகத்தில் கடைசியாக ஒரு கொடுக்கல் வாங்கல் பற்றிய பதிவுகள் உள்ளடக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் கணக்குப் புத்தகம் புதுப்பிக்கப்படாவிட்டால், ஒரு நகல் அல்லது கணக்குக் கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் விவரங்கள் வங்கியிடமிருந்து பின்னர் கோரப்பட்டால், அத்தகைய சேவையை வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிக்க வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

கணக்குக் கூற்று வழங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்.

10. கணக்குக் கூற்று வழங்கப்படும் சுழற்சி முடிந்து 10 நாட்களுக்குள் கணக்குக் கூற்று வரவில்லை என்றால் வங்கிக்கு அது பற்றித் தெரிவிக்க வேண்டும் என்பதுடன், குறிப்புகள் சரியாக உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வங்கியிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு கணக்குக் கூற்றையும் சரிபார்க்க வாடிக்கையாளர் இணங்குகிறார். ஏதேனும் பிழைகள் / தவறுகள் கண்டறியப்பட்டால், கணக்குக் கூற்று கிடைத்த நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அது பற்றி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

11. கணக்குக் கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகும். வங்கியிடமிருந்து கணக்குக் கூற்றுக்களின் பிரதிகள் கோரப்பட்டால், வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வங்கிக் கட்டணங்களுக்கு இணங்க இந்த சேவையை வழங்குவதற்கான ஒரு கட்டணத்தை அறவிடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

வைப்புச் செய்தல்

12. வங்கியின் பெயரில் வரையப்படாத வரைவோலைகள் / காசோலைகள் மற்றும் ஏனைய கட்டண கட்டளைகளை வாங்குவதா அல்லது அவற்றை சேகரிப்புக்காக அனுப்புவதா என்பது வங்கியின் விருப்புரிமைக்குரியது. . பணம் செலுத்தும் வங்கி பின்பு பணம்

செலுத்த நிராகரிக்குமாயின், வாங்கிய அனைத்து பொருட்களுக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கு எதிராக முழு நிவாரணத்தை (கட்டணங்கள் உட்பட) வங்கி மேற்கொள்ளும். காசோலை திரும்பியமை குறித்த அறிவிப்பு கிடைத்த பிறகு கணக்கில் பற்று வைக்கப்படும்.

13. வங்கியின் பெயரில் வரையப்பட்ட வரைவோலைகள்/காசோலைகள் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்காக வழங்கப்படும் போது, வங்கி அதன் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்கு ஏற்ப கையாளுதல் கட்டணங்களை அதிலிருந்து கழிக்கலாம் என்பதுடன் அது அத்தகைய வைப்புத் தொகைகளின் மதிப்பீட்டுத் திகதியில் வங்கியின் செயல்பாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் வங்கியால் தீர்மானிக்கப்படும். சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்காக வங்கியின் பெயரில் வரையப்படாத வரைவோலைகள்/காசோலைகள் கிடைக்கும் போது, அவை சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும் போது கையாளும் கட்டணத்துக்கு மேலதிகமாக காசோலையின் முகப் பெறுமதியில் இருந்து மேலதிக தள்ளுபடிக் கட்டணங்களை கழிக்கும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

14. ஒரு சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கைப் பொதுவாக ரூ. 10,000 அல்லது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வேறு அளவு ஆரம்ப வைப்புத் தொகையுடன் திறக்கலாம். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அதை விடக் குறைந்த அல்லது கூடிய ஆரம்ப வைப்புத்தொகையுடன் கணக்குகளைத் திறப்பதை வங்கி தனது விருப்பத்தின் பேரில் பரிசீலிக்கலாம். இருப்பினும், அத்தகைய திறப்புகள் நிபந்தனை 22 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு உட்படும்.

15. தேவைக்கேற்ப எந்த நேரத்திலும் வைப்புச் செய்யலாம். அனைத்து வைப்புக்களும் வைப்புச் சீட்டில் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பத்துடன் கையால் குறிப்பு இடப்பட்டு அல்லது பணம் எடுக்கும்/வைப்பிலிடும் இயந்திரங்களால் கணக்குப் புத்தகத்தில் குறிப்பு இடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும். கையொப்பமிடக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளின் பெயர்ப் பட்டியல் மற்றும் பணம் எடுக்கும்/வைப்பிலிடும் இயந்திரங்கள் உள்ள இடங்கள் பற்றிய அச்சிடப்பட்ட பிரதியின் நகலை கோரிக்கை விடுத்து பெற்றுக் கொள்ளலாம்.

16. பணம் வைப்புச் செய்வதற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, வங்கியின் பெயருக்கு வரையப்பட்ட மற்றும் பயனாளியின் பெயர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் மூலம் செய்யப்படும் வைப்புக்கள் கிளை முகாமையாளரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளப்படலாம். காசோலை மூலம் வைப்பு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், காசோலை மூலம் கிடைக்கின்ற வருமானம் (அப்படி ஏதேனும் இருந்தால்) வைப்பு செய்யப்பட்ட வாடிக்கையாளரின் சிரேஷ்ட பிரஜைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டாலன்றி, (தற்காலிக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல்) காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்புச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் காசோலைகள் தொடர்பில் வங்கி வாடிக்கையாளருக்கு பொறுப்புக் கூறாது. வைப்புப் பெட்டியின் மூலம் தற்காலிக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருப்பினும் அது பற்றிப்

பொருட்படுத்தாது, அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் வாடிக்கையாளரின் சிரேஷ்ட பிரஜைகள் கணக்கில் வரவு வைக்கப் பட்டிருந்தாலன்றி, காசோலை வைப்பு பெட்டிகளில் வைப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படும் காசோலைகள் தொடர்பில் எந்தவொரு உரிமைக்கோரிக்கையையும் வங்கி எந்தச் சூழ்நிலையிலும் அல்லது எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளாது. வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும் காசோலைகள் சேகரிப்பு நோக்கத்திற்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், அது காசோலை வழங்கப்பட்ட வங்கியால் அங்கீகரிக்கப்படும் வரை பணத்தை மீளப் பெற முடியாது. பணம் இருப்புத் திகதி குறிப்பிடப்படுவது அது பற்றிய அறிவிப்பு நோக்கங்களுக்காக மாத்திரமேயாகும். சாசோலைகளை சேர்த்தல் மற்றும் அனுப்புதல் ஆகியவற்றுக்காக சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகள் பயன்படுத்தப்பட மாட்டாது என்பதுடன், காசேலை வைத்திருப்பவருக்கு, வைப்புச் செய்பவருக்கு அல்லது ஒரு மூன்றாம் தரப்புக்கு செலுத்தப்பட வேண்டும் என எழுதப்பட்டுள்ள வைப்புக் காசோலை, இலாபப் பங்கு, செயலாணைகள் மற்றும் வேறு நோக்கங்களுக்காக ஏற்றுக் கொள்வதை நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

பணம் மீளப் பெறல்

17. உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு தானியங்கி டெலர் இயந்திரங்கள் (ATM கள்) ஊடாக அல்லது வங்கிக் கிளைகளிலிருந்து தேவைக்கு ஏற்றவாறு பணம் மீளப் பெறலாம். ATM கார்ட் கட்டணங்கள் மற்றும் ஏனைய வங்கிகளின் ATMகளில் இருந்து பணம் எடுப்பதற்கான கட்டணங்கள் மற்றும் பணம் மீளப் பெறுவதற்கான கட்டணங்கள், வங்கியின் அமுலில் உள்ள கட்டண அறவீடுகளுக்கு இணங்க செலுத்தப்பட வேண்டும். வங்கிக் கிளைகளிலிருந்து பணம் எடுப்பதானது 22 ஆம் நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, திருப்திகரமான ஆளடையாளத்துகன்னு இணங்கவும் கணக்குப் புத்தகம் வழங்கப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பில் கணக்குப் புத்தகம் சமர்ப்பிக்கப்பட்டால் அனுமதிக்கப்படும். வங்கி அதன் விருப்புரிமையின்பின் படி வங்கிக் கிளைக் கவுன்டர்களில் இருந்து கணக்குப் புத்தகத்தை சமர்ப்பிக்கும் தேவை இன்றி பணத்தை எடுக்க அனுமதிக்கலாம் (கணக்குப் புத்தகம் இல்லாத மீளப் பெறல்). வங்கி அதன் விருப்புரிமையின் படி வாடிக்கையாளருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு கிளைகளில் இருந்து மேற்குறிப்பிட்டவாறு கணக்குப் புத்தகம் இல்லாத மீளப்பெறலுக்காக ஒரு கட்டணத்தை அறிமுகம் செய்யவோ அல்லது அறவிடவோ முடியும். முத்திரைக் கட்டணம் மற்றும் ஏனைய வரிகள் அல்லது அறவீடுகள் ஆகியவற்றை கணக்கு வைத்திருப்பவர் செலுத்த வேண்டும் என்பதுடன், அவை சட்டத்திற்கு இணங்க வங்கியால் பரிந்துரைக்கப்படும் விதத்தில் செலுத்தப்பட வேண்டும். காசோலை மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ பணத்தை திரும்பப் பெற முடியாது.

18. வங்கி செயற்படுவது, நேஷன்ஸ் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்காக தபால் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள அல்லது வங்கியின் ஏதேனும் ஒரு கிளைக்கு நியாயமான ஒரு காலவல்லைக்குள் ஒப்படைக்கப்பட்டுள்ள உண்மை என

உறுதி செய்யப்பட்டுள்ள எழுத்துப் பூர்வ அறிவுறுத்தல்களின் படி (நிலையான கட்டளைகள் உட்பட) மாத்திரமேயாகும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அத்தகைய அறிவுறுத்தல்களின் படி செயல்படத் தவறியதால் ஏற்படும் எந்தவொரு உரிமைக் கோரிக்கை, இழப்பு அல்லது செலவுக்கும் வங்கி பொறுப்பாகாது. வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தம் இல்லாமல் தொலைநகல், மின்னஞ்சல் அல்லது வேறேதும் மின்னணு ஊடக வழிமுறைகள் மூலம் கிடைக்கப்பெறும் எந்த அறிவுறுத்தல்களையும் வங்கி ஏற்காது.

வட்டி

19. வட்டி மாதந்தோறும் (வழக்கமாக மாதத்தின் கடைசி நாளில்) கணக்கில் வரவு வைக்கப்படும். வட்டி செலுத்தலானது நிபந்தனை இலக்கங்கள் 20 மற்றும் 22 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

20. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ள முறையில் கணக்கு ஆரம்பிக்கும் படிவங்களில் வாடிக்கையாளரின் வரி நிலை மற்றும் வாடிக்கையாளர் வசிக்கும் முகவரி பற்றிய சட்டப்பூர்வ ஒரு பிரகடனத்தை அனைத்து வாடிக்கையாளர்களும் பூர்த்தி செய்ய வேண்டும். வாடிக்கையாளரால் பூர்த்தி செய்யப்பட்ட சட்டப்பூர்வ பிரகடனம், ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள மற்றும் அதே ஆணையால் (mandate) நிர்வகிக்கப்படுகின்ற ஏற்கனவே உள்ள மற்றும் புதிய கணக்குகளுக்கு ஏற்புடையதாகும். நிறுத்தி வைக்கப்படும் வரி (withholding tax) அல்லது வட்டிக் கொடுப்பனவு மீது செலுத்த வேண்டிய ஏனைய வரிகளானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அவ்வாறான ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் காலத்திற்காக செலுத்த வேண்டிய வட்டியில் இருந்து கழித்துக் கொள்வதற்கு வங்கியால் நடவடிக்கை எடுக்கப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பின்னொரு சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத வரியை வங்கியிடம் கோரும் பட்சத்தில், (எந்த அறிவிப்பும் இன்றி) வாடிக்கையாளரிடமிருந்து அறவிடும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

பொதுவானவை

21. கணக்கு வைத்திருப்பவரின் முகவரி மாறினால், அது பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

22. கணக்குக் கூற்று வழங்கப்படுகின்ற எந்தவோரு சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கின் இருப்பு ரூ.1000/-க்கும் குறைவாக இருந்தால், வங்கி அதன் விருப்புரிமையின் படி கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் மற்றும்/அல்லது சேவைக் கட்டணங்கள் மற்றும்/அல்லது தக்கவைப்பு வட்டியை அறவிடலாம். வங்கி தனது விருப்புரிமையின் படி, கிளை கவுண்டர்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்காக மற்றும்/அல்லது ATM கொடுக்கல் வாங்கல்களுக்காக பிரத்தியேகமான பரிவர்த்தனைக் கட்டணத்தை அறிமுகப்படுத்தலாம். கணக்கைத் தொடங்கிய நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வாடிக்கையாளரால் மூடப்படுகின்ற கணக்குகளுக்குக் கையாளுதல் கட்டணம் அறவிடப்படும். தற்போது அமுலில் உள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றி வங்கியின் கட்டணங்கள் சம்பந்தமான சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஒரு

கோரிக்கையை விடுத்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

23. அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம் நடப்பு மாதத்தில் அல்லது அடுத்த மாதம் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்படும்.

24. சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகள் தொடர்பான கணக்குக் கூற்றுக்கள் மற்றும்/அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளின் பிரதிகள் 7 ஆண்டுகள் வரை மட்டுமே வங்கியால் பாதுகாத்து வைக்கப்படும். அத்தகைய பதிவுகள் அனைத்தையும் 7 ஆண்டுகளுக்குப் பிறகு அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், 7 ஆண்டுகள் காலாவதியான பிறகு கணக்குக் கூற்றுகளின் பிரதிகளை அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளின் பிரதிகளை வழங்குவதற்கான எந்தப் பொறுப்பையும் வங்கி ஏற்காது.

25. அஞ்சல் மூலம் அனுப்பப்படும் எந்த அறிவிப்பும், பதிவுகளில் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளரின் முகவரிக்கு அனுப்பப்பட்ட ஏழு (7) நாட்களுக்குள் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கருதப்படும். கடிதம் மூலம் மற்றும்/அல்லது உள்ளூர் செய்தித்தாள்கள் மற்றும்/அல்லது அறிவிப்புப் பலகைகள் மற்றும்/அல்லது ஏனை அறிவிப்பு முறைகள் மூலம் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மற்றும்/அல்லது திருத்தங்கள் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்டுள்ள அறிவிப்பாகக் கருதப்படும்.

26. வங்கியின் விருப்புரிமையின் படி மேற்கொள்ளப்பட்டாலே அன்றி, ரொக்கப் பண வைப்பு மற்றும் பணம் திரும்பப் பெறுதல், காசோலை வைப்பு மற்றும் ஏனைய பற்று/வரவு தொடர்பான கொடுக்கல் வாங்களுக்காக வங்கி பிரத்தியேகமான அறிவிப்புகளை தபால் மூலம் அனுப்பாது.

27. வாடிக்கையாளரின் ஒரு கணக்கை (கணக்குளை) வாடிக்கையாளரின் வேறு ஏதேனும் ஒரு கணக்குடன் ஒருங்கிணைத்து அல்லது ஒன்றோடொன்று இணைத்து கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு தொகையையும், வங்கிக்கு வாடிக்கையாளர் செலுத்த வேண்டியுள்ள வேறு ஏதேனும் ஒரு தொகையை வேறு ஏதேனும் ஒரு கணக்கிற்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு வழியில், அத்தகைய பொறுப்புக்கள் உண்மையானதாகவோ அல்லது நிச்சயமற்றதாகவோ, முதன்மையானதாகவோ அல்லது பிணையாகவோ மற்றும் பலதோ அல்லது கூட்டாகவோ அல்லது ஒன்றிணைக்கப்பட்டதாகவோ இருந்தாலும் கூட, சாட்டுவதற்கு அல்லது பரிமாற்றம் செய்வதற்கு வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புதல் அளித்து அதற்காக வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார்.

28. வங்கியின் பதிவேடுகளில் கடைசியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளரின் முகவரிக்கு ஏழு (7) நாட்கள் எழுத்துமூல அறிவித்தல் கொடுத்துவிட்டு எந்தவொரு சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு திறத்தலையும் மறுக்கும் மற்றும்/அல்லது எந்தவொரு கணக்கையும் மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு. கணக்குப் புத்தகம் வழங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகள் தொடர்பில் குறைந்த பட்ச நிலுவை ரூ. 1000/- மாக மற்றும் கணக்குக் கூற்று வழங்கப்படும் சேமிப்புக் கணக்குகள் தொடர்பில் குறைந்த பட்ச நிலுவை ரூ. 100/- ஆக

உள்ள கணக்கு வைத்திருப்பவரின் ஒரு கணக்கைத் தடுக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது என்பதுடன், கணக்கு மூடப்பட்டாலேயன்றி கணக்கு வைத்திருப்பவருக்கு இந்த நிலுவையை மீளப் பெற்றுக் கொள்ள உரிமை கிடையாது. அவ்வாறு குறைந்த பட்ச நிலுவை காரணமாக தடுக்கப்பட்ட நிலுவையுடன் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற அவ்வாறான அனைத்து கணக்குகளையும் மூன்று (3) மாத காலம் செயலற்ற நிலையில் இருக்கும் கணக்குகளையும் வங்கியின் பதிவேடுகளில் கடைசியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளரின் முகவரிக்கு கணக்கு மூடப்படுவது பற்றிய எழுத்து மூலமான அறிவித்த லை 7 நாட்களுக்கு முன் கொடுத்துவிட்டு மூடிவிடுவதற்கான உரிமை வங்கிக்கு உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் 7 நாட்கள் அறிவிப்புக் காலம் முடிய முன்னர் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து கணக்கை மூடுவது பற்றி எந்த அறிவுறுத்தலும் கிடைக்காவிட்டால், அவ்வாறான கணக்கில் நிலவும் நிலுவையைக் கட்டணமாக அறவிட்டுக் கொள்ளும் உரிமை வங்கிக்கு உண்டு.

29. சட்டத்தின் பிரகாரம், அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அல்லது மத்திய வங்கியின் அறிவுறுத்தலின் படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் மேற்படி நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தானாகவே திருத்தத்திற்கு உட்படும்.

30. ஒரு நேஷன்ஸ் சிரேஷ்ட பிரஜைகள்சேமிப்புக் கணக்கைத் திறக்கின்ற அல்லது ஏற்கனவே அத்தகைய கணக்கைப் பராமரித்து வருகின்ற எந்த ஒருவரும், சேமிப்பு செயற்பாடுகளை நிர்வகிக்கும் வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து, புரிந்துகொண்டு, அதற்குக் கட்டுப்படுவதாக அர்த்தம் கொள்ளப்படும். 25 ஆம் இலக்கப் பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு வாடிக்கையாளருக்கு அறிவித்தல் கொடுத்து விட்டு இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வதற்கு, மாற்றுவதற்கு அல்லது ஏதேனும் ஒரு பகுதியை சேர்ப்பதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

31. கணக்கின் தகவல்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் எந்தவொரு இடத்திற்கும் இடமாற்றுவதற்கு (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது வைத்துக் கொள்வதற்கும் மற்றும் வங்கியில், அதன் தலைமையகத்தில், கிளை அலுவலகங்களில் அல்லது வழங்கப்படுகின்ற எந்தவொரு தரவுகள் தரப்படுத்தும் சேவையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆட்கள் மற்றும் நிர்வாகம்மற்றும் உள்ளக மேற்பார்வைத் தேவைகள் உள்ளிட்ட எந்தவொரு அலுவலுக்காகவும் மேற்படி இடமாற்றல் (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல் அல்லது வைத்துக் கொள்ளல் அவசியம் எனக் கண்டால், கணக்குக் கூற்றுகளை அச்சிடல் மற்றும் தபாலிடல் அல்லது அதை ஒத்த சேவை வழங்குவதற்காக வங்கியுடன் தொடர்புள்ள ஆட்களுக்கு அந்தத் தரவுகளுக்குள் பிரவேசிக்க முடியும் என்ற விடயத்துக்கு வாடிக்கையாளர் இணங்கி அதனை ஏற்றுக் கொள்கின்றார்.

32. பணச் சலவையை தடுத்தல், பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தல் மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு உட்படக் கூடிய எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் நிதி மற்றும் வேறு சேவைகளை வழங்குதல் தொடர்பாக வங்கிக்கு

ஏற்புடையதாகின்ற சட்டங்களுக்கு இணங்க வங்கி செயல்படுதல் வேண்டும். எனவே, அத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்குவதற்குத் தகுந்ததாகக் கருதும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க வங்கிக்கு அதன் விருப்புரிமையின் படி உரிமை உண்டு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளின் விளைவாக எந்தவொரு தரப்பினராலும் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு இழப்புக்கும் (நேரடியாக அல்லது மறைமுகமாக மற்றும் வரையறையுள்ள அல்லது வரையறையற்ற, இலாபம் அல்லது வட்டி இழப்பு உட்பட) அல்லது சேதங்களுக்கு வங்கி பொறுப்பாக மாட்டாது;

(அ) மேற்கூறப்பட்டுள்ள அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளின் படி செயல்படத் தகுந்ததாகக் கருதும் எந்தவொரு நடவடிக்கை மூலமும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்படுத்தப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது வேறு பொறுப்புக்களின் கீழ் வங்கி அதன் கடமைகளைச் செய்யும் போது ஏதேனும் தாமதம் அல்லது தோல்விகள் ஏற்படுதல்.

அல்லது

(ஆ) இந்தப் பிரிவின் கீழ் வங்கியின் ஏதேனும் ஓர் உரிமையை செயற்படுத்துதல்.

ஏற்புடையதாகின்ற எந்தவொரு சட்டங்களையும் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளையும் மேலோங்கிச் செல்கின்ற தேவைகளுக்கு உட்பட்டு, நியாயமான முறையில் நடைமுறைச் சாத்தியமானவுடன் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதை வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க வங்கி முயற்சி மேற்கொள்ளும்.

33. நிலுவையின் நிலை பற்றிய அடுத்த காலமுறைக் கூற்றை வெளியிடுவதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ அல்லது கணக்குப் புத்தகத்தை புதுப்பிப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ எந்தவொரு சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள பிழையான பதிவுகள் ரிவர்ஸ் என்ட்ரி மூலம் வங்கியால் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இரத்துச் செய்யப் படலாம். வட்டி (அல்லது வேறு ஏதேனும் ஓர் அனுகூலத்தைக்) கணிப்பிடுவது தொடர்பாக வங்கியினால் தவறான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட அதே திகதியில் சம்பந்தப்பட்ட உட்படுத்தல்களைச் செய்தல் வேண்டும்.

34. இங்கு அடங்கி உள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, ஒரு கணக்கைத் திறப்பதற்கு முன்னர் அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள வங்கியின் பொதுவான வியாபார நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இந்தக் கணக்கு வைத்திருப்பவரும் கட்டுப்படுகின்றார். அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவான வியாபார நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இதில் அடங்கியுள்ள அனைத்து நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கணக்கு வைத்திருப்பவர் முழுமையாகவும் சமமாகவும் கட்டுப்பட்டிருக்கின்றார்.

விசேட நியதிகள்

35. சிரேஷ்ட பிரஜைகள் திட்டங்களின் கீழ் வாடிக்கையாளர் சேமிப்புத் திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர் மற்றொரு திட்டத்திற்குத் தேவையான குறைந்த பட்ச வரம்பை பராமரிக்கும் வரை, தனியார் வங்கி / உள் வட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களிலிருந்து அவருக்கு வழங்கப்படும் அனுகூலங்கள் இரத்துச் செய்யப்படும்.

36. சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கில் கடன் வசதிகள் போன்ற சிறப்புத் திட்டங்கள் வழங்கப்படலாம். இருப்பினும், கடன் வசதி மாதாந்த ஓய்வூதியம் பெறும் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதுடன், இந்தக் கடன் வசதியைப் பெற அவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கிற்கு செலுத்த வேண்டும். மேலும், கணக்கு வைத்திருப்பவரின் செலவில் ஒரு காப்புறுதியைப் பெற்றுக் கொள்வது அத்தகைய கடன் வசதிகளைப் பெறுவதற்கான ஒரு முன்நிபந்தனையாக இருக்க இடமுண்டு.

37. கணக்கு வைத்திருப்பவருக்கு வங்கியில் நிலையான ஒரு வைப்பு இருந்தால் மற்றும் கணக்கு வைத்திருப்பவர் மருத்துவ அவசர நிலை காரணமாக முதிர்வுக்கு முன் நிலையான வைப்புத் தொகையை கூட்டுவதானால், அபராதம் எதுவும் விதிக்கப்படாது. இருப்பினும், இந்தச் சலுகையைப் பெற, கணக்கு வைத்திருப்பவர் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கை வங்கியில் பராமரித்து வர வேண்டும்.

38. கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புத் திட்டங்கள் மற்றும்/அல்லது சேவைகள், அத்தகைய திட்டங்கள் மற்றும்/அல்லது சேவைகளுடன் தனித்தனியாக வழங்கப்படும் பிரத்தியேக நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

கொள்கிறார்.

39. இங்கு குறிப்பிட்டுள்ள படி இலவச ஆயுள் காப்புறுதியை வழங்கும் நோக்கத்துக்குத் தேவையான வாடிக்கையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை/கடவுச் சீட்டு இலக்கம் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை வழங்குவதற்கு நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கிக்கு வாடிக்கையாளர் இணக்கம் தெரிவிக்க வேண்டும். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. யால் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிக்கு அத்தகைய வெளிப்படுத்தல் செய்யப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்

வங்கியுடனான எனது ஒப்பந்தத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய பொது நிபந்தனைகள் மற்றும் இந்த சிறப்பு நிபந்தனைகளை நான் வாசித்து, புரிந்துகொண்டு அவற்றின் மீது கவனம் செலுத்தியுள்ளேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.....

வாடிக்கையாளரின் கையொப்பம்